# ஆய்வாளர்களின் தங்கச்சுரங்கம் கலைஞரின் அரசியல் வரலாறு!



கல்வியாளர்களின் பார்வையில் கலைஞர் என்று சொல்லும்போது அதனை பல்வேறு கோணங்களில் அணுகலாம். கல்வித்துறைக்கு கலைஞர் செய்தது என்ன, கல்வியாளர்களுக்கு அவர் செய்த சிறப்புக்கள் என்ன, அவரே ஒரு மக்கள் கல்வியாளராக விளங்கிய மாண்பு என்ன என பல கோணங்களில் எழுதலாம். நான் இங்கே தேர்ந்தெடுப்பது வேறொரு கோணம். அது கல்வியாளனாக கல்வித்துறை கலைஞரைக் குறித்து எவ்வாறான ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும், அது எவ்வளவு பயன்மிக்கதாக இருக்கும் என்ற கோணத்திலே சிந்தித்துப் பார்க்க விரும்புகிறேன்.

இந்தியா சுதந்திரம் பெற்ற போது கலைஞர் இருபத்து மூன்று வயது இளைஞர். திராவிடர் கழக செயல் வீரராகவும், கலையுலகில் கால்பதிப்பவராகவும் இருக்கிறார். அடுத்த ஒரு சில ஆண்டுகளில் திராவிட முன்னேற்ற கழகம் தோன்றியபோது அதன் முன்னணி தளகர்த்தகர்களில் ஒருவராக மலர்கிறார். அதன் பின் வந்த எழுபதாண்டுகளில் தமிழக வரலாற்றின் தன்னிகரற்ற நாயகர் ஆகிறார்.

செல்வச் செழிப்பு மிக்க பின்னணியுடனோ, சமூகச் செல்வாக்குள்ள பின்புலத்திலோ அவர் தோன்றவில்லை! மிக எளிய பின்னணியில், சமூக விலக்கத்தை சந்திக்கும் சமூக பின்னணியிலிருந்துதான் வாழ்வை துவங்கி, ஒட்டுமொத்த தமிழகத்தின் ஒப்பற்ற தலைவராகிறார். அவர் கடந்து வந்த அந்த பாதை என்பது மக்களாட்சி அரசியலில் ஆர்வமுள்ள அனைவரும் ஆராய்ந்து அறிய வேண்டிய பாதையாகும்.

அவரைப்போல இந்திய துணைகண்டத்தில் அரசியலிலும், ஆட்சியிலும், கலை இலக்கிய உலகிலும் தொடர்ந்து அரை நூற்றாண்டுக்காலம் நீடித்த பங்களிப்பை செலுத்திய ஆளுமை என மற்றொருவரைக் காண்பது கடினம். உலக அளவிலும் கூட இப்படி ஏழரை கோடிப்பேர் கொண்ட பெரும் மக்களாட்சி சமூகத்தின் அரசியல் அச்சாணியாக, தொடர்ந்து தேர்தல் களங்களில் வாகை சூடியவராக, இவ்வளவு காலம் நீடித்து விளங்கிய ஒரு தலைவர் இருந்திருக்கிறாரா என்பது கேள்விதான்.

இப்படிப்பட்ட தலைவரின் வாழ்வு என்பது ஒரு யுகசந்தியாகும். அதாவது உலகளாவிய அளவில் மானுடம் மிகப்பெரிய மாற்றங்களை சந்தித்த எழுபதாண்டுகள் இவை. அறிவியல் தொழில்நுட்ப புரட்சிகள், வாழ்வியல் அணுகுமுறைகளில் வெடித்தெழுந்த பெரும் சமத்துவ நோக்கு, கல்வியின் பரவல், ஊடகங்கள், தகவல் தொழில்நுட்ப சாதனங்களின் பெருக்கத்தில் பெரிதும் விரிவடைந்த பொதுமன்றம் என மாற்றங்களை பட்டியலிட்டால் மாளாது.

அத்தனை மாற்றங்களையும் தமிழ் சமூகமும் உட்செரித்துள்ளது. அவ்வாறு நிகழும்போது அந்த மாற்றங்களுக்கு ஏற்றாற்போல சமூகத்தை தகவமைப்பது ஒரு தலைவரின் தலையாய பணியாகும். அந்த பணியினை அயராது மேற்கொண்டு தமிழ் பண்பாட்டினை புதுப்பிக்கும் செயலில் தொடர்ந்து ஈடுபட்டவர் கலைஞர்.

கலையுலகில் கருத்தாக்கம், கட்சியில் கொள்கை உருவாக்கம், ஆட்சியில் அமலாக்கம்!

கலைஞரின் பணி என்பது மூன்று தளங்களில் பரந்துள்ளது. கலையுலகிலே, படைப்புகளிலே பல கருத்தாக்கங்களை உருவாக்குகிறார். திராவிட முன்னேற்ற கழகத்தின் கருத்தியலுக்கு பல வெளிப்பாடுகளை கலைவெளியில் படைக்கிறார். அந்த கருத்தாக்கங்கள் கட்சியின் கொள்கைகளாக உருவாகின்றன. அவையே ஆட்சி செய்யும்போது அரசின் திட்டங்களாக, சட்டங்களாக அமலாக்கப் படுகின்றன.

இதுதான் கலைஞரை ஆய்வாளர்களின் தங்கச்சுரங்கமாக மாற்றுகிறது. அவரது எழுபதாண்டுகால எழுத்துக்களை, அவரது பேச்சுக்களை, நேர்காணல்களை ஆராயும் போதுதான் மகத்தான சமூக மாற்றங்களின் பகுதியாக எப்படி அவர் செயல்பட்டார் என்பதை துல்லியமாக காண இயலும். நாட்டிலே, உலகிலே ஒவ்வொரு நாளும் எவ்வளவோ பிரச்சினைகள். அது ஒவ்வொன்றையும் தலைவராக இருப்பவர் தன் சிந்தனையில் பரிசீலித்து கட்சி அணியினரிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். அப்படி அவர் எழுதியவைதான் அன்றாடம் முரசொலியில் உடன்பிறப்புகளுக்கான மடல்களாக அமைந்தன.

இவற்றில் அவர் பகிர்ந்து கொண்ட சிந்தனைகளையும், ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தபோது அவர் நடைமுறை படுத்திய திட்டங்களையும் தொடர்புறுத்திக் காண்பது முக்கியமான ஆய்வுப் பணியாகும். ஒரு தலைவரின் வாழ்விலே எப்படி அனுபவங்களும், சிந்தனைகளும், செயல்களும் தொடர் சங்கிலியாக பரிணமிக்கின்றன என்பதை விரிவான ஆய்வுகள் மூலம் தொகுக்க வேண்டும். இத்தனை கோடி மக்களின் வாழ்க்கையிலே தாக்கத்தை செலுத்திய ஒருவரின் ஒவ்வொரு வார்த்தையும், எழுத்தும் முக்கியமானவை அல்லவா? அவற்றை விரிவாக படித்து, ஆராய்ந்து, அவை பிறந்த காலகட்ட த்தில் அவற்றை பொருத்தி புரிந்துகொள்வது என்பது வரலாற்று புரிதலுக்கு இன்றியமையாதது அல்லவா?

**சட்டமன்றத்தின் உருவகமானவர்!**

கலைஞர் இரண்டாவது இந்திய பொதுத்தேர்தலில் குளித்தலையில் வெற்றிபெற்று சட்டமன்றத்தில் நுழைந்ததில் இருந்தே, சட்டமன்ற பங்கேற்பிற்கு, நடவடிக்கைகளுக்கு பெரும் முக்கியத்துவம் அளித்தவர். அவரது சட்டமன்ற பங்கேற்பு ஆளும் காங்கிரஸ் கட்சியினாலேயே பாராட்டப் பட்டது. மக்களாட்சி என்பது புதிதாக இந்தியாவில், தமிழகத்தில் மலர்ந்திருந்த நேரம். அதில் மக்கள் பிரதிநிதிகள் எப்படி இயங்க வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக விளங்கியவர் கலைஞர். ஆய்வாளர்கள் அந்த சட்டமன்ற உரைகளையும், பங்கேற்புகளையும் தொகுத்து ஆராய வேண்டும். எதிர்கட்சி வரிசையிலே இருந்தாலும் சரி, ஆட்சியாளராக, முதல்வராக இருந்தாலும் சரி, கலைஞர் சட்டமன்ற நடவடிக்கைகளை எப்படி எதிர்கொண்டார் என்பதை ஆராய்ந்து கூறும்போது தான் எதிர்காலம் பாடம் கற்கும்.



ராஜன் குறை
பேராசிரியர்
அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.

சட்டமன்ற பணியிலே கலைஞர் முன்னத்தி ஏர். இரட்டையாட்சி முறை நடைமுறைக்கு வந்து நீதிக்கட்சி பதவியேற்ற 1920 முதலே சென்னையில் சட்ட மன்றம் இயங்கி வந்துள்ளது. ஆனால் வயது வந்தோருக்கெல்லாம் வாக்குரிமை என்ற நடைமுறை தோன்றியபிறகு தான் புதுவெள்ளம் போல சட்டமன்றத்தில் பரவலான எளிய மக்களின் பங்கேற்பு என்பது சாத்தியமாகிறது. அப்படி மொழி வாரி மாநிலம் உருவானபின் அமைந்த முதல் சட்டமன்றத்தில் நுழைந்த கலைஞர் சட்டமன்ற பங்கேற்பிற்கான முன்னுதாரணமாக மாறியது என்பது கருதத்தக்கது. ஆய்வுக்குரியது.

**ஆய்வு நோக்கின் அவசியம் என்ன?**

ஒரு தலைவரின் சிந்தனைகளையும், செயல்களையும் ஆராய்வது, அவை குறித்து பல்வேறு கோணங்களிலே சிந்திப்பது என்பது மக்களாட்சி சமூகத்தில் நடைபெற வேண்டிய முக்கிய பணியாகும். காந்தியாரின் சிந்தனைகளை, அரசியல் வாழ்வைக் குறித்து தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவதை, நூல்கள் எழுதப்படுவதை காண்கிறோம். நேருவைக் குறித்து ஆய்வுகள் தொடர்ந்து நிகழ்கின்றன. அவர் எழுத்துக்கள் வாசிக்கப்பட்டு, தொகுக்கப்பட்டு, விவாதிக்கப்படுகின்றன. அம்பேத்கரைப் பற்றிய ஆய்வுகள் இன்று உலகின் பல பகுதிகளில் மேற்கொள்ளப் படுகின்றன.

அதைப் போலத்தான் நவீன தமிழகத்தின் சிற்பிகளான பெரியார், அண்ணா, கலைஞர் ஆகிய மூவர் குறித்தும் கல்விப்புல ஆய்வுகள் நிகழ வேண்டும். அதில் குறிப்பாக ஆட்சிக் கட்டிலிலும் அமர்ந்து பல அரிய திட்டங்களை செயல்படுத்திய கலைஞர் குறித்த ஆய்வுகள் முக்கியமானவை. அவற்றை தமிழ் நாட்டு வரலாற்றை, சமூகத்தை நன்கு அறிந்தவர்கள் தான் மேற்கொண்டு ஆங்கிலத்திலும் எழுதி அயலாரும், உலக சமூகமும் புரிந்துகொள்ள வகை செய்யவேண்டும்.

உதாரணமாக தன் மகனுக்கே ஸ்டாலின் என்று சோவியத் அதிபரின் பெயரை வைத்தவர் சோஷலிசம் குறித்து எப்படி சிந்தித்தார், என்னவெல்லாம் எழுதியுள்ளார், ஆட்சியில் இருந்தபோது எப்படியெல்லாம் அந்த சிந்தனைகளுக்கு வடிவம் கொடுத்தார் என்பதை எழுத வேண்டும் என்பதுடன், அவற்றை பிற மாநில, பிற நாட்டு தலைவர்களுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தும் எழுத வேண்டும். மதச்சார்பின்மை குறித்து எப்படி சிந்தித்தார், எப்படி மக்களாட்சியில் அனைத்து வகையான நம்பிக்கையாளர்களுக்கும் சம மதிப்பினை அளித்தார் என்பதையெல்லாம் விரிவாக ஆராய்ந்து கூற வேண்டும். இப்படி பல்வேறு முக்கியமான அரசியல் கோட்பாடுகளை முன்வைத்து ஆய்வு செய்யவேண்டும்.

உலக கல்விப்புலத்தில் மக்களாட்சி குறித்து, கடந்த எழுபதாண்டுகால உலக சமூகங்களின் அனுபவங்கள் குறித்து நிறைய ஆய்வு நூல்கள் எழுதப்படுகின்றன. உலக சமூகங்களிலே, மக்களாட்சி என்னும் புரட்சிகர நடைமுறையை வெற்றிகரமாக உள்வாங்கி செதுக்கிய சமூகங்களில் தமிழ்நாடு மிக முக்கியமானது. அந்த வரலாற்றுச் சாதனையின் நாயகர்களில் ஒருவர்தான் கலைஞர். அவர் அரசியல் வரலாற்றை ஆராய்வதென்பது மக்களாட்சியின் சாத்தியங்களை ஆராய்வதுதான் என்றால் மிகையாகாது. அதைச் செய்வது தமிழ் நாட்டு கல்வியாளர்களின் தலையாய கடப்பாடாகும். ●

## விண்மீனும், நிலவும், மழையும், தோணியும் !

**சோற்றுப் பருக்கைகளை இலையில்**
**வாரியிறைத்தாற் போல வானத்தில்**
**நட்சத்திரங்கள்**
**வானில் ஒளிவிட்டுக் கொண்டிருந்தன.**

**தந்தையின் தோளில் நழுவி,**
**தாயின் மடியில் குதிக்கும் குழந்தைகளைப் போல**
**அலைகளின் மேலே ஏறிக்**
**கீழே விழுந்து, மீண்டும் எழுந்து**
**அந்தத் தோணி தனது பயணத்தை**
**நடத்திக் கொண்டிருந்தது.**

**படபடவென அடித்து உதிரும்**
**புளியம் பழங்களைப் போல மழைத் துளிகள்**
**விழத் தொடங்கின.**

**வானத்து நட்சத்திரங்கள் இலையில் இறைத்த**
**சோற்றுப் பருக்கைகள் போல**
**ஒளிவிட்டன அல்லவா அவற்றைத்**
**திடீரெனக் கருமேகங்கள்**
**பொறுக்கித் தின்றுவிட்டன போலும்**
**பாதியை மறைத்து மீதியைக் காட்டி**
**உலவிய நிலவுப் பெண்ணும்**
**பயந்தோடிப் பதுங்கி விட்டாள் போலும் !**

**- கலைஞர்**



## மாவீரர் நேரு !

**மா**வீரர் நேரு அவர்கள் 74 ஆண்டுகள் வாழ்ந்தார். தம் வாழ் நாளில் 9 ஆண்டுகள் சிறையில் இருந்திருக்கிறார். 17 ஆண்டுகள்

தலைமை அமைச்சராக இருந்திருக்கிறார். அவருக்கு நாட்டு மக்கள்தான் ஆண்டவன். அவர்களுடைய நெஞ்சம்தான் ஆலயம்.

பொதுத் தொண்டுதான் பூசை, நைவேத்தியம் எல்லாம்.

**- கலைஞர்**